தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சனிக்கிழமை, 1979 நவம்பர் 3-ம் நாள்

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சிங்கம்புனரியிலுள்ள 'என்பீல்டு' தொழிலாளர்கள்

* குறுகிய கால வினா எண் 1 —திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் சிங்கம்புனரியிலுள்ள 'என்பீல்டு' தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர், வேலைக்கு மறுபடியும் எடுத்துக்கொள்ளப்பெறவும் 8.33 சதவிகிதம் போனஸ் பெறவும் அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) 27-9-79 லிருந்து போனஸ் மற்றும் சில கோரிக்கைகளை வலியுறுத்தும் முகமாக தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

(ஆ) இராமநாதபுரம் தொழிலாளர் துறை அலுவலர் இருதரப்பாரோடும் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். அப்பேச்சு வார்த்தைகள் பயன் அளிக்காததால் தற்போது மதுரை தொழிலாளர் நல துணை ஆணையரே பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் ; தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் போன்ற பின் தங்கிய மாவட்டத்தில் நடக்கிற தொழிற்சாலை நிர்வாகிகள் வேண்டும் என்றே ஆட்களை வேலை நீக்கம் செய்து, அதுவும் தொழிற்சங்கச் செயலாளரை நீக்கியும், மேலும் 70-க்கு அதிகமான தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து, அதன் மூலம் வேலை நிறுத்தத்தை உருவாக்கி விட்டனர். போன ஆண்டு நஷ்டம் ஏற்பட்டபோதே கூட போனஸ் கொடுத்த நிர்வாகம் இப்பொழுது, பேலன்ஸ் ஷீட் போட்டு லாபம் வந்த பிறகும் கூட போனஸ் கொடுக்காமல் இருப்பதோடு

தொழிலாளர்களையும் பழி வாங்கக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கின்றன, அதை தடுத்து நிறுத்த அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை நான் மதுரை சென்றிருந்த போது அந்த தொழிலாளர்கள் என்னைக் கண்டு பேசினார்கள். நான் அதோடு நில்லாமல் டி. சி. எல். அலுவலகத்திற்கும் அவர்களை வரச் சொல்லி அரை மணி நேரம் பேசினேன். அதற்குப் பின்னால், சென்னைக்கு வந்த பிறகு, இங்கேதான் மானேஜிங் டைரக்டர் தொழில் அதிபர் இருக்கிறார். அவரையும் அழைத்து அதைப் பற்றி பேசினேன். சமரசமான முடிவு காண வேண்டும் என்ற நோக்கத்தோடு பேசினேன். அதில் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் சொன்னது போல தொழிற்சங்கச் செயலாளர் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். டிஸ்மிஸ் செய்யப்படவில்லை. அவரை வேலை நீக்கம் செய்யப்படக்கூடாது என்ற உறுதி மொழியோடு யாரையும் பழி வாங்கக் கூடாது என்று உறுதி மொழியும் வாங்கியிருக்கிறேன். அதை அவர் எந்த அளவு காப்பாற்றுவார் என்பது வேறு. மேலும் பேச்சு வார்த்தை நடத்தலாமென்றால் அவர் வெளிநாடு சென்றிருக்கிறார் என்று தகவல் வந்திருக்கிறது. இதுதான் தற்போது இருக்கக்கூடிய நிலவரம்.

திரு. கு. ரமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தீபாவளி சமயத்தில் தமிழகம் முழுவதும் போனஸ் கொடுக்கப்பட்டபோது, போன வருஷம் நஷ்டம் ஏற்பட்ட காலத்தில் கூட $8\frac{1}{3}$ சதவீதம் போனஸ் கொடுத்த இந்த நிர்வாகம், எந்தக் காரணங்கள் இருந்திருந்த போதிலும் தீபாவளி சமயத்தில் போனஸ் கொடுக்காமல் இருந்தது தொழிலாளர்களைப் பழி வாங்கக் கூடிய ஒரு கொடூரமான நடவடிக்கை என்று கணக்கில் எடுத்துப் பார்த்து, அதுவும் இந்த என்பீல்டு நிறுவனத்தார் மிகப் பெரிய நிறுவனத்தைக் கொண்ட முதலாளி, அவர்களை வழிக்குக் கொண்டு வர அரசு தலையிட்டு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதை தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே. நான் முன்பே சொன்னேன் திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் கேட்ட கேள்விக்கே அதை விடையாகச் சொன்னேன். அமைச்சர் நேரிடையாகத் தலையிடுகிறார் என்றால், அரசாங்கம் நேரிடையாகத் தலையிடுவது போலத்தான். டி. சி. எல். அலுவலகத்திற்கே நானே சென்று பேசியிருக்கிறேன். டி. சி. எல். தலையிட்டாலும், வேறு எந்த லேபர் ஆபிசர் தலையிட்டிருந்தாலும் கூட அரசே தலையிடுவது போலத்தான்.

1979 நவம்பர் 3]

நான் மதுரை சென்றிருந்தபோது தொழிலாளர்களையும் சந்தித்துப் பேசினேன். சென்னையில் மேனேஜிங் டைரக்டரையும் சந்தித்துப் பேசினேன். முதலாளிகளின் மீது சிலவற்றைத் திணிக்க தனி அதிகாரங்களைப் பெறக்கூடிய முறையில் இந்த அரசு நடவடிக்கை எடுத்து முயன்று வருகிறது. மாண்புமிகு ரமணி போன்றவர்களின் ஒத்துழைப்பின் பேரில் அரசு மேலும் அதிகாரங்களை முதலாளிகள் மீது திணிக்க பெற முடியும் என்று நம்புகிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்தப் போராட்டம் புதிய முனைக்குத் திரும்பியிருக்கிறது. தொழிலாளர்கள் விவசாயிகள் முதலானோர் அரசுக்கு நேரிடையாக வந்து முறையீடு செய்து மறியல் செய்யப்போவதாக தகவல் வந்திருக்கிறது. அதனால் அரசு உடனடியாக விரைவில் ஏதாவது செய்ய முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் அதிபர் வெளிநாடுகளுக்கு சென்றிருக்கிறார் என்று சொல்கிறார்கள். அவர் வந்தவுடன் நானே நேரில் சென்று உடனடியாக பேச்சு வார்த்தை நடத்தி இதற்கு ஒரு முடிவு எடுக்க முயல்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை சுமுகமாக முடிவதற்கு அமைச்சர் எடுத்த முயற்சிகளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிற அதே நேரத்தில், வெளி நாடு சென்றிருக்கும் தொழில் அதிபருக்காக காத்திருக்காமல், அங்கே இருக்கக்கூடிய மேனேஜ்மெண்ட்டைப் பார்த்து ஒரு முடிவு எடுக்க அரசாங்கம் நேரிடையாக தலையிடுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னேன். நானே நேரிடையாகத் தலையிட்டிருக்கிறேன், அமைச்சர் தலையிடுகிறார் என்றால் அது அரசாங்கம் தலையிடுவது போலத்தான் என்று. மேனேஜிங் டைரக்டர் இல்லாமல் மற்றவர்கள் இதில் முடிவு எடுக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே இன்னும் 2, 3 தினங்களுக்குள் வரவேண்டிய தொழில் அதிபர் வெளிநாட்டிலிருந்து வந்தவுடன், நான் இன்றே போன் செய்து அவர் வந்து விட்டாரா என்று கூடத் தெரிந்து கொண்டு, வந்தவுடன் அவரை அழைத்துப் பேசுகிறேன். எவ்வளவு விரைவாக அழைத்துப்பேச முடியுமோ அவ்வளவு விரைவாக அழைத்துப் பேசி முடிவு எடுக்கிறேன்.

[1979 நவம்பர் 3

திருச்சி விற்பனைக்குழுச் செயலாளர் மீதான குற்றச்சாட்டுகள்

*குறுகிய கால வினா—எண் 2 திரு. க. சுப்பு: மாண்புமிகு வேளாண்மை' பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளியப்பாரா:—

(அ) திருச்சி மார்க்கட் கமிட்டியில் செயலாளராக இருக்கும் திரு. எம். பாலசுப்பிரமணியம் என்பவர் மீது பல்வேறு குற்றச் சாட்டுகளைக் கூறி புகார் மனு ஒன்று அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) திருச்சி விற்பனைக் குழுச் செயலாளர் திரு. பாலசுப்பிரமணியம் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் வேளாண்மை விற்பனை இயக்குநர் மூலம் விசாரித்து அறியப் பட்டது, இயக்குநர் அறிக்கையின்படி குற்றச்சாட்டுகள் உண்மைக்கு புறம்பானவை என்றும் ஆதாரமற்றவை என்றும் தெரிய வருகிறது.

பொதுப் பணித் துறையினைப் பிரித்தமைத்தல்

* வினா எண் 81—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநிலப் பொதுப்பணித்துறையை இரண்டாகப் பிரிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) ;

(அ) மற்றும் (ஆ) : இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : மாநிலத்திலுள்ள பொதுப் பணித் துறையை இரண்டாகப் பிரிக்க அரசு உத்தேசித்துள்ளதாக அமைச்சரின் பேரவைச் செயலர் அறிவித்தார். அதை எந்த வகையில் பிரிக்க உத்தேசித்துள்ளார்கள்? அது குறித்த விவரங்களை அரசு அறிவிக்க இயலுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : கட்டடப் பிரிவு, பாசனப் பிரிவு என்று இரண்டாகப்பிரிக்க அரசு உத்தேசித்துள்ளது.